REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 15உ புதன் (31—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 16உ வியாழன் (1—9—55) [இதழ் 67

நகர சபைமுன் உண்ணாவிரதம்!

நகரத்தை சுத்தம் செய்யாமலும், சாக்கடை வசதிகளை ஏற்படுத்தாமலும் நகர சபையினர் இருப்பதைக் கண்டிக்கும் வகையில், ராஜ்கோட்டில், ஜெட்பூர் எனும் நகரிலுள்ள ஐந்து நபர்கள், நகர சபை காரியாலயத்தின்முன் காலவரையறையின்றி உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கின்றனர்.

எத்தனையோ முறை இது குறித்து நகரசபையினருக்கு மனுக்கள் தரப்பட்டிருந்தும்கூட, சுகாதாரத் துறையில் கவனம் செலுத்தாமல் நகரசபை இருந்து வருகிறது என்று அந்த ஐந்து நபர்களும் கூறியிருக்கின்றனராம்.

தொழில் துறையில் சமநிறை ஏற்பாடாம்!

இரும்பும், நிலக்கரியும் உடைய பகுதிகளுக்குச் சலுகையாம்!

தென்னகம் ஒதுக்கப்பட்டிருப்பதற்கு நேருவின் கண்துடைப்பு!

திப்ருகார், ஆக. 30—

தொழில் துறையில் தென்னகம் ஏற்கனவே பின்தங்கிக் கிடக்கிறது.

முதல் திட்டத்திலும் திராவிடம், தொழில் ஏற்பாட்டில் அதற்குரிய பாதுகாப்பினைப் பெறவில்லை.

இரண்டாவது திட்டத்தில் தென்னாடு தொழில் வளத்தில், தேவைப்படும் அளவிற்கு முன்னேறும் என நம்புவதற்குத் துளியும் இடமில்லை.

நிகழ்கால உண்மை இது.

இவ்வுண்மை தென்னகத்தினர் அனைவரையும்- அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் புண்படுத்திக் கொண்டு இருக்கிறது.

சிலபலர், அந் நெஞ்சுக் கொதிப்பை வெளிப்படையாகக் காட்டி, மனச்சாந்தித் தேடவும் முனைந்துள்ளனர்.

நல்லெண்ணத்துடன் குறைபாட்டினைக் களையவும் சிலர் முயற்சித்து வருகின்றனர்.

தங்கள் தென்னகம் தொழில் துறையில் புறக்கணிக்கப்பட்டு வருவதற்குப் பரிகாரம் தேட முனைந்துள்ளவர்களின் சீற்றத்தைத் தணியவைக்க, இந்தியப் பேரரசின் அமைச்சர்கள், செயலளவில் முன்போலவே நடந்துகொண்டு வந்தபோதிலும், வாயளவில் தேனினும் இனிக்கப் பேசுவதில் முனைந்துள்ளனர்.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒவ்வொரு பகுதியையும், அதிலும் குறிப்பாக தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கின்ற பகுதிகளை சமநிறையில் வளமுடையதாக ஆக்கப் போவதாக, இந்தியப் பேரரசின் சார்பில் பறை சாற்றப்படுகிறது.

இத்தகு பேச்சை ஏற்கனவே மத்திய அமைச்சர்கள் பேசியுள்ளனர்.

இப்பொழுது இந்தியப் பிரதமர் நேருவே, இவ்வகையில் நயம்படக் கூறக் கிளம்பியுள்ளார்.

"இந்தியாவை சமநிறையில் வளமுள்ளதாக்கும் கருத்துக் கொண்டுள்ளோம்."

"கனரகத் தொழில்களை நிர்மாணிப்பதற்கு, மூலப் பொருட்கள், மின்சாரம், போக்குவரத்து வசதி போன்ற சாதகங்கள் அனைத்தையும் கருதவேண்டியதாக இருக்கிறது."

"இங்கிலாந்தும் மேற்கு ஐரோப்பாவும் பேரரசுகளாக வளர்ந்தமைக்கு, அவைகளிடம் நிலக்கரியும் இரும்பும் இருந்தமையே காரணமாகும். இன்று இருப்பது போன்றே, இரும்பும் நிலக்கரியும் தொழில் வளர்ச்சியின் அஸ்திவாரமாக இருக்கிறவரையில், அவைகளிலிருக்கும் பகுதிகளிலேயே சில கனரகத் தொழில்கள் கட்டாயமாக இடம் பெற்றேயாகும்."

"கிழக்கு பீகார் பிரதேசத்தைச் சுற்றியும், மேற்கு வங்கத்தில் ஒரு பகுதியும், ஒரிசாவில் சிறு பகுதியும், நிலக்கரி, இரும்பு வேறு கனிப்பொருள் ஆகியவற்றில் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன."

"இந்தியாவின் மற்றப் பகுதிகள் வேறு வசதிகளையும் சாதகங்களையும் கொண்டுள்ளன."

வடகிழக்கு எல்லையில் கொந்தளிப்பு!

எல்லைவாசிகளை ஒடுக்க இராணுவ ஆட்சி

ஷில்லாங், ஆக. 29—

இந்தியப் பேரரசிற்கு எதிராக, வடகிழக்கு எல்லைப்புறத்தில் வசிக்கும் மலை ஜாதியினரின் எதிர்ப்பு நடவடிக்கை அளவு கடந்து செல்லுகிறது.

டியான்சாங் பகுதியில் உள்ள மலை ஜாதியினர் சுமார் 500 நபர்கள் வரை ஒன்றுசேர்ந்து மூன்று பிரிவாகப் பிரிந்து இராணுவத்தினரை எதிர்க்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அவர்களை அடக்குவதற்கு அங்கு சென்றுள்ள இராணுவத் தலைமை, அம்மலைஜாதியினரை சரணடையுமாறு இறுதி எச்சரிக்கை செய்திருக்கிறது.

அதற்கு, மலைஜாதியினர் பணிய மறுத்துவிட்டதுடன், இராணுவத்தை மறைந்திருந்துத் தாக்கவும் முனைந்துவிட்டனர் என்று நம்பப்படுகிறது.

எனவே, டியான்சாங் பகுதியின் நிர்வாகம் நேரடியாக இந்தியப் பேரரசின் இராணுவத் துறைக்கு மாற்றப்பட்டு இருக்கிறது.

மலை ஜாதியினரின் எதிர்ப்பு நடவடிக்கை கட்டுக்கடங்காமல் போகுமானால் டியான்சாங் பகுதி முழுதுமே, தற்காலிகமாக இராணுவ ஆட்சியின்கீழ் கொண்டு வரப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1,50,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஜல்பைகுரி, ஆக. 30—

கூலி உயர்வு, போனஸ், மற்றும் இதர வசதிகள் கோரி, 49 தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்த $1\frac{1}{2}$ இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனராம்; சம்பவங்கள் எதும் நடைபெறவில்லையாம்.

புதுடில்லி, ஆக. 30—

'தொழிலாளர் அப்பீல்தார் டிரிபியூனல்' எடுபடுமென்றும், இதற்கான ஒரு மசோதா காலாகாலத்தில் அமுல் செய்யப்படுமென்றும், ராஜ்யங்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 144

உழவர் கிளர்ச்சியின் எதிரொலி

ஸ்ரீபெரும்புதூர், ஆக. 29—

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீபெரும்புதூர் பகுதியிலிருக்கும் மாத்தூர் கிராமத்தில் உழவர்கள்—நிலச் சொந்தக்காரர்களிடை பிணக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதன் விளைவாக 32 உழவர்கள் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிலச் சொந்தக்காரர்களுக்கும் உழவர்களுக்கும் ஏற்பட்ட பிணக்கில், இரு சாராரும் முடிவிற்கு வந்து ஆகஸ்டு மாதத்தில் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்களாம் அந்த உடன்படிக்கையை மீறி, நிலச் சொந்தக்காரர்கள், வேறு ஆட்களைக் கொண்டு நிலத்தை உழ முயன்றார்களாம். அம்முயற்சியைத் தடுத்து, உடன்படிக்கைப்படி நடந்து கொள்ள வேண்டுமென உழவர்கள் வலியுறுத்தினார்களாம்.

இதனால் அமைதி கெடக்கூடும் என அஞ்சிய மாஜிஸ்திரேட் 144 தடை உத்தரவு பிறப்பித்ததாகவும், தடை உத்தரவை மீறி உழவர்கள் நடந்துகொண்டதாகவும், அவ்வாறு தடை உத்தரவை மீறின 32 உழவர்களைக் கைது செய்ததாகவும் தெரியவருகிறது.

உழவர்கள் மீது தடியடிப் பிரயோகமும் நடைபெற்று இருக்கிறது.

பலமான போலீஸ் பந்தோபஸ்தும் மாத்தூர் கிராமத்தில் இருந்து வருகிறது.

'இந்திக்கு எதிரான திட்டங்கள் மாநில மாநாட்டில் உருவாகும்'

'ஆதிக்கக்காரர் அட்டூழியத்தை ஆராய்வோம்'

என். வி. நடராசன் கருத்துரை

"டெல்லி நகரிலே, மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இல்லத்திலே ஒரு கூட்டம் நடைபெற்றது; கூட்டமென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தாரோ, அல்லது மற்றெந்த திராவிட இயக்கக் கருத்துக்களைக் கொண்டவர்களாலோ கூட்டப்பட்டதல்ல; அங்கே கூடியவர்களெல்லாரும் டெல்லி மத்திய பாராளுமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள்; 'அகில உலக மேதை' எனப் போற்றப்படுகிற ஆற்காடு இராமசாமியார் அவர்கள்கூட அக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்; அங்கு, சென்னை அமைச்சர் சுப்பிரமணியமும் கலந்துகொண்டிருக்கிறார்; இவர்களெல்லாரும் ஒன்றாகக்கூடி விவாதித்திருக்கின்றனர்; எதுபற்றி? சென்னை மாநிலத்திற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதற்காக! எவ்விதக் கட்சி பேதங்களுமில்லாமல், தென்னாட்டின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபை உறுப்பினர்கள், தங்கள் மாநிலத்திற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 394 கோடி ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றனர்; இவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் காமராசரும் சென்றார்; எல்லோருமாகச் சேர்ந்து மத்திய திட்டக் குழுவிடம் தங்கள் ரூ. 394 கோடி திட்டத்தைச் சமர்ப்பித்து, அந்தத் தொகையை ஒதுக்குமாறு கேட்டுக்கொண்டனர்; கேட்டது தி. மு. கழகத்தவர் அல்ல—டெல்லி பாராளுமன்ற உறுப்பினர்களும், மாநில அமைச்சர்களும்தான்; ஆனால், மத்தியக் குழு கொடுத்ததோ—கொடுக்க ஒப்புக்கொண்டதோ ரூ. 200 கோடிதான்!

"இதனைக் குறித்துக்கூட நாம் கவலையடையவில்லை; ஆனால், நாம் பார்க்கிறோம் பத்திரிகைகளிலே—நேரு பண்டிதரின் சொந்த மாநிலமான உத்திரபிரதேசத்திலே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமதிப்பீடு ரூ. 400 கோடி! பம்பாயில் ரூ. 375 கோடிக்குத் திட்டம்! பீகார் மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் தொகை ரூ. 380 கோடி! ஆனால், சென்னை மாநிலத்திற்கோ ஒதுக்கப்பட ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் தொகை ரூ. 200! தாழ்வுற்று—தேய்ந்து வரண்டு கிடக்கும் இந்த மாநிலத்தின் அபிவிருத்திக்கென ரூ. 394 கோடிக்குத் திட்டம் வகுத்தால், அதனை ரூ. 200 கோடியாக மத்திய சர்க்கார் வெட்டுகிறது; ஆனால், அங்கேயோ வேண்டிய அளவிற்குத் தாராளமாக அள்ளி அள்ளிக் கொடுக்க மத்திய அரசாங்கத்தின் கை நீண்டுகொண்டே போகிறது; இது நியாயமா—நேர்மையா? இதுதான் 'ஏக இந்தியா'வின் தத்துவமா?—'ஆசிய ஜோதி' என்று அவனியெங்கும் புகழப்படும் அலகாபாத் பண்டிதரின் அரசியல் லீலையா? இது தென்னாட்டிற்கிழைக்கப்படும் துரோகம் என்பதைத் தவிர வேறென்ன? இதைத்தான் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

சேலம் கொடி வழக்கில் முடிவு

★

சேலம், ஆக. 30—

சேலம் — அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான காலி நிலத்தில் கட்டப்பட்டுள்ள காந்தியார் சிலைமீது பறந்துகொண்டிருந்த காங்கிரஸ் கொடியைப்போல், திராவிட முன்னேற்றக் கழகக் கொடியும் பறக்க விடப்பட்டது.

ஆனால், காங்கிரஸ்காரர்களின் முயற்சியால் போலீஸ் அதிகாரிகள் தி. மு. கழகக் கொடியை பலாத்காரமாக இறக்கியதும் அல்லாமல், கழகத் தோழர்களான இரா. மாரியப்பன், சி. முருகேசன், எஸ். ஏ. குமாரசாமி, ஆறுமுகம், எம். பழனியப்பன், ப. முருகன், பி. தங்கவேலு ஆகியவர்கள் மீது போலீசார் 143, 447 பிரிவுகளின் கீழ், சேலம் நகர மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

மேற்படி வழக்கில் இதுவரை சுமார் 10 விசாரணைகள் நடைபெற்ற பின்னர் இன்று பகல் $11\frac{1}{2}$ மணிக்கு, மாஜிஸ்திரேட் அவர்கள், கழகத் தோழர்கள் எழுவரையும் குற்றவாளிகள் அல்ல என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்து, அனைவரையும் விடுதலை செய்திருக்கிறார். (ந. நி.)

7 புதிய பஸ்கள் ஓடும்

சென்னை, ஆக. 30—

சென்னை நகரில், செப்டம்பர் 1-ந் தேதி முதல் 7 புதிய பஸ்களை விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31-8-'55 புதன்

வாய்ச்சொல் வீரர்!

"வறுமை, பஞ்சம், பசி, பட்டினி — இவைகளை ஒழிப்போம்; என்றென்றைக்கும் தலைதூக்காமல் செய்வோம்; மக்களின் வாட்டத்தைப் போக்குவோம்; அவர்கள் வாழ்வு மலரப் பாடுபடுவோம்."

"வயிருர உணவும், மானம் காக்க உடையும், விதியை விடாக்கிக்கொண்டிருப்போருக்கு குடியிருப்பு வசதியும் பெற்றுத்தருவோம்."

"மருத்துவ வசதிகள் விடு தேடி ஓடிவரும். வேலையில்லை என்ற வேதனைக்கு எவருமே ஆளாக விடமாட்டோம்."

காங்கிரஸ் தோன்றிய நாளிலிருந்து 'சுதந்திரம்' பெற்றதும் இன்னின்ன செய்வோம் என்பதாகக் கூறி வந்தவற்றுள் சில தான் மேலே கண்டிருப்பவை.

மக்களின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை 'சுதந்திரம்' பெற்றதும் உடனடியாக நிறைவேற்றித் திருவதே தங்கள் வேலைத் திட்டமாக இருக்கும் என்று காங்கிரசார் முழங்கினர்.

'சுதந்திரம்' கிடைத்தது. நாட்டவரும், 'வாழ்வு மலரும்; மணம் பெறலாம்' என்றெண்ணிக்கிடந்தனர். ஆனால் என்ன பலன்?

ஆண்டுகள் எட்டு உருண்டோடிவிட்டன.

மக்களின் வாழ்வு மலர்ந்து விட்டதா? வறுமையும், பசியும், பற்ருக்குறையும் மக்களை விட்டு அகற்றப்பட்டுவிட்டனவா?—என்ருல், இல்லை என்பதை நாட்டில் நடைப்பிணங்களாய் உலவிக்கொண்டிருக்கும் மக்களின் நிலையும், அவர்களைப் பற்றி சர்க்கார் வெளியிட்டுக் கொண்டிருக்கும் புள்ளி விவரங்களும் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

பண்டித நேரு—பிரதமர், பேசியிருக்கிருர் நேற்று முன்தினம், திப்ருகார் என்ற நகரில், 'இந்த நாட்டின் பரந்த நிலப்பரப்பில் வாழும் மக்கள் எல்லோருக்கும் உணவு, உடை, இருப்பிடம், நல்ல குடி தண்ணீர், மருத்துவ உதவி, கல்வி, வேலை ஆகியவை கிடைக்கும் வரை ஓய்வு ஒழிவின்றி வேலை செய்யப்போகிறேன்' என்பதாக!

.........'கிடைக்கும் வரை' என்ருல், 'இவை எல்லாம் இன்னும் கிடைக்கவில்லை' என்பதுதானே பொருள்?

எட்டாண்டுகள் ஆகிவிட்டன—தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையானது என்று கருதப்பட்ட சுதந்திரம் கிடைத்து; ஆனாலும், மக்கள் எல்லோருக்கும் உணவும், உடையும், இருப்பிடமும் போன்ற இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் கிடைக்கவில்லை. எட்டாண்டு 'சுதந்திர' காங்கிரஸ் ஆட்சியால், அவற்றை மக்களுக்குப் பெற்றுத் தர முடியவில்லை.

சமுதாய நலத் திட்டங்கள், தேசிய 'விஸ்தரிப்பு' திட்டங்கள், இவற்றிற்கெல்லாம் மேலாக, ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்படுகின்றது; திருப்திகரமாக அவை எல்லாம் அமுல் செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றன; என்ருலும் மக்கள் எல்லோருக்கும் எட்டு ஆண்டுகளாகியும் அடிப்படைத் தேவைகள் கிடைக்கவில்லை.

'திட்டங்களை நிறைவேற்ற'—என்று கூறி, மக்களின் வரிச் சுமை பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. காஷ்மீரமும், கன்னியாகுமரியும், கங்கையும் காவிரியும், பம்பாயும், கல்கத்தாவும் அடமானமாக வைக்கப்பட்டு நூற்றுக் கணக்கான கோடி 'டாலர்' கடன் வாங்கப்பட்டிருக்கிறது; அமெரிக்கா நிதி உதவி செய்கிறது; ரஷ்யா தொழில் நுணுக்க உதவி தருகிறது; 'கொழும்பு திட்டம்' பயன்படுகிறது; ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

இத்தனையும் நடைபெற்றும், மக்கள் எல்லோருக்கும் அடிப்படைத் தேவைகள் கிடைக்கவில்லை.

'கிடைக்கவில்லை' என்று பிரதமரே ஒப்புக்கொள்கிருர்; ஆனல், 'என் கிடைக்கவில்லை' என்று பண்டித நேரு கூறவில்லை.

கிடைக்கும் வரை ஓயாது ஒழியாது பாடுபடப் போவதாகப் பேசியிருக்கிருர்.

முதல் 'சுதந்திர தின'த்தன்று டில்லி செங்கோட்டையில் கொடியேற்றி வைத்துவிட்டு, வானெலியில் பேசியபோதும் பண்டித நேரு குறிப்பிட்டார்—'வறுமையை ஒழிப்போம்; வாட்டத்தை போக்குவோம்; வாழ்வு தருவோம்; அதற்காக ஓயாது ஒழியாது பாடுபடுவோம்,'—என்று, துந்துபி முழங்கினர்.

இன்று எட்டு ஆண்டுகளுக்குப் பிறகும், அதே 'பாணி'யில் பேசுகிருர். இடையில் சுழன்றுவிட்ட காலம், எட்டு ஆண்டுகள்—அவருக்கு நினைவிலிருக்காமலிருக்க முடியாது; என்ருலும், 'கிடைக்கும் வரை ஓயாது ஒழியாது பாடுபடுவோம்,' என்று பேசுகிருர்.

எட்டு ஆண்டுகளில் ஓயாது ஒழியாதுதான் பாடுபட்டு வருகிருர், பண்டிதர்; என்ருலும், 'இன்னும் மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் கிடைக்கவில்லை,' என்கிருர்.

அமெரிக்கா சென்ருர்—இந்தோனேஷியா சென்ருர்—செஞ்சீன சென்ருர் — ரஷ்யா சென்ருர்—ஐரோப்பா சென்ருர்—எங்கெல்லாமோ சென்று வருகிருர்; அந்தந்த நாடுகளில் வாழும் மக்களையும், அவர்களுக்குக் கிடைத்திருக்கிற சொகுசான வாழ்க்கையையும் கண்டுவிட்டுத் திரும்புகிருர்; 'கண்டறியாதன கண்டேன்—களிப்புற்றேன்' என்று பாடுகிருர்; ஆனல், அந்தக் கண்டறியாதனவற்றை இந்த நாட்டு மக்கள் இங்கு காண வழிவகை கண்டாரா?' என்ருல், 'இல்லை' என்று அவரே கூறுகிருர்—'இன்னும் கிடைக்கவில்லை' என்றும் குறிப்பிடுகிருர்.

'உணவு உற்பத்தி இலட்சிய எல்லையைத் தாண்டிவிட்டது; இந்தியா உணவு ஏற்றுமதி செய்கிற அளவு 'ஸ்டாக்' வைத்திருக்கிறது,' என்று பேசப்படுகிறது; ஆனாலும், இங்குள்ள மக்களுக்கு வயிருர உணவு கொள்ளும் வாய்ப்பில்லை; பலர் பகல் பட்டினி—இராப் பட்டினிகளாகத்தான் இருக்கின்றனர்.

"பர்மாவிலே, இரங்கூனிலே, இலங்கையிலே, ஆப்பிரிக்காவிலே, ஆஸ்திரேலியாவிலே, இங்கிலாந்திலே, எங்கள் நாட்டுத் துணிகளுக்கு ஏக கிராக்கி; துணி உற்பத்தி, 'சுதந்திர'த்திற்குப் பிறகு பல மடங்கு அதிகரித்திருக்கிறது," என்று கூறப்படுகிறது; ஆனாலும், இந்த நாட்டில், சேலையின் ஒரு தலைப்பை இடுப்பில் கட்டிக்கொண்டு, மறு தலைப்பை மரக் கிளையில் கட்டித் தொங்கவிட்டு, ஈரம் உலர்த்தி உடுத்திக்கொள்ளும் நிலையில்தான் மக்கள் இருக்கின்றனர்; நிலைமை மாறவில்லை!

அப்படித்தான் இதர இன்றியமையாத் தேவைகளும்; இவை எல்லாம், 'கிடைக்கும் வரை ஓயாது ஒழியாது பாடுபடுவேன்,' என்று கூறிக்கொண்டே, 'உல்லாச பவனி' வரும் பண்டிதர், எட்டு ஆண்டுகளைக் கடத்திவிட்டார்; ஒன்பதாம் ஆண்டுத் துவக்கத்திலும், கூறமுற்படுகிருர்—'ஓயாது ஒழியாது பாடுபடுவேன்' என்று!

இவை எல்லாம், 'வாய்ச் சொல்லில் வீரர் அடி கிளியே!' என்ற வாசகங்களை நினைவூட்டுவதாகத்தான் தென்னட்டு மக்களுக்கு இருக்கும்; ஏனெனில், இந்த எட்டு ஆண்டு காலத்தில் ஏதேனும் பண்டிதர் பாடுபட்டிருந்தால்—அது பலன் தந்திருந்தால், அவை வடநாட்டவருக்கே அன்றி, தென்னட்டவருக்கு அல்ல என்பதால்!

நெய்வேலி திட்டம்

மத்திய சர்க்கார் கவனத்திலிருக்கிறதாம்!

புதுடில்லி, ஆக. 29—

"நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்ட வேலைகள், இந்திய சர்க்காரின் தொடர்ந்த கவனத்திலிருந்து வருகிறது;

"இங்கு நிலக்கரி உற்பத்தி துவங்குமானல் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 8 ஆக இருக்கும்; இப்போது பீகாரிலிருந்து ரூ. 40 முதல் ரூ. 70 வரை டன் ஒன்றுக்கு தந்து நிலக்கரி பெறப்படும் அவசியம் தென்னட்டிற்கு அப்போது இல்லாமற் போகும்,"

(4-ம் பக்கம் பார்க்க.)

விமானப் போக்கு வரத்தை தேசீய மயமாக்கியதில் சர்க்கார் ஏமாந்தனர்

பல நிறுவனங்கள் கொள்ளை நஷ்ட ஈடு பெற்றனவாம்!

புதுடில்லி, ஆக. 29—

இந்தியாவிலிருந்த விமானப் போக்கு – வரத்து நிறுவனங்களை இந்திய சர்க்கார் தேசிய மயமாக்கியபோது, அதிகமான நஷ்டஈடுகள் பெறுவதற்காக பல விமான நிறுவனங்கள் மேற்கொண்ட கிழ்த்தரமான தந்திரங்களுக்கு இந்திய சர்க்கார் பலியாகி, ஏராளமான நஷ்டம் அடைந்து ஏமாந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

இது பற்றிய தகவல்கள் 'இந்திய ஏர்லைன்ஸ் கார்பொரேஷன்' வெளியிட்டுள்ள அறிக்கையில் காணக் கிடைக்கின்றன:—

கடந்த 1953-ம் ஆண்டில் நஷ்ட ஈடு விகிதம் தெரிந்ததும் ஒரு கம்பெனி 4,000 ரூபாய்க்கு ஓட்டை விமானமொன்றை வாங்கி, அதை அவசர அவசரமாக புது விமானம் போலாக்க மெருகு போடும் வேலையில் ஈடுபட்டதாம்; இந்த வேலைக்கு ரூ. 1,60,000 செலவாயிற்று என்று தெரிவித்து நஷ்டஈடு பெற்றதாம்.

தேசிய மயமாக்கப்பட்டதால், ஒப்பந்தம் அரைகுறையாகச் செய்யப்பட்டதெனக் கூறி, மற்ெருரு கம்பெனியினர் இரண்டரை லட்சம் நஷ்ட ஈடு கேட்டிருக்கின்றனர்.

'நிர்வாக டைரக்டருக்கு நஷ்ட ஈடு' என்று கோரி, ரூ. 5,000 கேட்டது மற்ெருரு கம்பெனி!

பறக்கும் நிலையில் இல்லாத விமானங்களையும், மோட்டார்களையும், தனிப்பட்ட முறையில் வெளி மார்க்கெட்டில் விற்றுவிடல் போன்ற காரியங்களில் ஈடுபட்டன பல கம்பெனிகள்.

'வீட்டுச் சொந்தக்காரர் இலாபம் அடையட்டுமே' என்று, விமான கம்பெனிகள் இருந்த வீட்டு வாடகையையும் உயர்த்தியிருக்கின்றனர்; இந்தச் செலவும், 'விமான கார்ப்பரேஷன்' தலையில் ஏறியது.

சர்க்காரிடமிருந்து தாராள சலுகைகள் கிடைத்த பின்னர், விமான எஞ்சின்களையும், உறுப்புகளையும் எத்தனை முறை அதிகமாக சுத்தம் செய்ய முடியுமோ அத்தனை முறை சுத்தம் செய்வதற்கென ஆயிரக் கணக்கான ரூபாய் நஷ்டஈடு கேட்டிருக்கின்றன, பல கம்பெனிகள்!

ஒரே மாதிரியான விற்பனை வரி

மத்திய ஆட்சியே விதிக்கும்?

இரு மாநிலத்தில் எதிர்ப்பு

புதுடில்லி, ஆக. 28—

நாடு முழுமையிலும் விற்பனை வரியை ஒரே விகிதத்தில் விதிக்க வேண்டுமென எல்லா மாநில சர்க்கார்களுக்கும் இந்திய சர்க்கார் யோசனை கூறியுள்ளனராம்!

இவ்விற்பனை வரியை மத்திய ஆட்சியினரே விதித்து, ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் அதை மாநிலங்களுக்கு விநியோகிக்கலாமென்றும், அல்லது, மாநிலங்கள் முடிவு செய்யும் ஒரே அடிப்படையில் மாநில சர்க்கார்கள் இவ்வரியைத் தொடர்ந்து விதித்து வரலாமென்றும் மத்திய ஆட்சியினர் யோசனையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாம்.

சிறிய மாநிலங்கள் இந்த யோசனையை வரவேற்றாலும், உத்திர பிரதேசம், பம்பாய் போன்ற மாநிலங்கள் இந்த யோசனையை ஆதரிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

நேபாளப் புரட்சித் தலைவர்

தாயக எல்லை வந்தடைந்தார்?

காட்மண்டு, ஆக. 29—

சீனவிலிருந்து தாயகம் திரும்பும் புரட்சித் தலைவரான டாக்டர் கே. ஐ. சிங், இப்போது எந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிருர் என்ற தகவல் இன்னமும் கிடைக்கவில்லையாம்

கடந்த ஆக. 14-ந் தேதியன்று, கிழக்கு திபேத் நகரான 'ஷிகெட்சி' எனும் இடத்தில் இருந்ததாகவும், அவர் அங்கிருந்து நேபாள எல்லைக்கு பதினைந்து தினங்களுக்குள் வந்து விடுவது என்று முடிவு செய்திருந்ததாயும் கூறப்படுகிறது.

மூன்ருண்டுகளுக்குப் பிறகு தாயகம் திரும்பும் அவர், தனக்கு நாட்டில் மன்னிப்பு வழங்கப்படும் என்று முழு மனதுடன் நம்புவதாகவும், மன்னிப்பு அபயம் வழங்கப்படும் என்ற உறுதி மொழி தரப்பட்டாலன்றி அவர் நேபாள எல்லைக்குள் நுழையமாட்டார் என்றும் தெரிகிறது.

தாங்கள் என்ன செய்யவிருக்கிருேம் என்பது குறித்து, நேபாள சர்க்கார், இன்னும் அதிகாரபூர்வமாக அவர் பற்றி தங்கள் கொள்கையை அறிவிக்கவில்லை.

'பிலிம்' இல்லாத திரைப் படம்!

'பிலிம்' இல்லாமலேயே திரைப் படம் தயாரிக்கும் முறை அமெரிக்காவில் முன்னேற்றமடைந்து வருகின்றது.

1956-ல், இத்தகைய சினிமாப் படங்களைப் பொதுமக்கள் பார்க்க முடியும் எனக் கூறுகின்றனர்.

திரைப்படக் காட்சிகளை மின்சார சக்தி மூலம் நாடாவில் பதிய வைத்து, இத்தகைய படங்களைத் தயாரிக்கும் முறையை மேற்கொண்டுள்ளனர்.

'டெலிவிஷனி'ல் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் காட்சிகளையும், ஒலியையும் சுமார் ½ அங்குல அகலமுள்ள நாடாவில் பதிய வைத்து, பிறகு சினிமாப் படத் திரையில் இப்படத்தைக் காட்டினர்.

ஒலிப் பதிவுக்குப் பயன்படுத்தப்படும் நாடாவைப் போலவே இருக்கும் இந்நாடாவுக்கு 'விடியோ டேப்' என்று பெயர் ஒலி பதிவு நாடாவுக்கு 'ஆடியோ டேப்' என்று பெயர். இவ்விரண்டு நாடாவும் இயங்கும் முறை ஒன்றே!

ஒலிப் பதிவு நாடாவில் இசை அல்லது பேச்சுவார்த்தைகள் பதிவு செய்யப்பட்டு, அதனை மீண்டும் கேட்க வசதியிருப்பதைப்போல, 'விடியோ' பிலிம்களில் காட்சிகளும், ஒலிகளும் பதிவு செய்யப்படுகின்றன.

இலங்கையில் தமிழுக்கு ஆபத்து?

'5 கோடி தமிழர்களும் தடுக்க முன்வருவர்'

இலங்கை மந்திரியின் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 29—

"இலங்கையில் தமிழுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் இந்தியாவிலுள்ள 5 கோடி தமிழ் மக்களும் அதனைத் தடுக்க முன்வருவார்கள்," என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் நல்லையா குறிப்பிட்டிருக்கிருர்.

'உயர்தர மொழிக் குழுவின் அறிக்கையால் தமிழ் மொழி அழிந்துவிடுமென்று அஞ்சுவதும் வெறும் பைத்தியக்காரத்தனமே ஆகும்,"

என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிருர்.

'ஏழாலை' எனுமிடத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலேயே திரு நல்லையா இவ்வாறு கூறியிருக்கிருர்.

அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய இலங்கை சர்க்கார் தபால் அமைச்சர் சு. நடேசன் அவர்கள் பேசுகையில், "தமிழ் இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே, இலங்கை அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள எங்களுக்கு, தமிழ் மொழிக்கு ஆபத்து ஏற்படுமேயானல் அந்த அமைச்சர் அவையில் மீண்டும் என்ன வேலை இருக்கிறது," என்று கேட்டார்.

கோவா படுகொலை: தமிழகமெங்கும் கண்டனம்

கோவாவில் அறப்போர் தொண்டர்கள் மீது போர்ச்சுகீசியர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தைக் கண்டித்து தமிழகத்தில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெற்று, கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; அவை இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன :—

குமரமங்கலம்

22—8—55 காலை 6 மணியிலிருந்து நகர் முழுமையிலும் கடை அடைப்பு மேற்கொள்ளப்பட்டு, மாலை 6 மணிக்கு, சர்வ கட்சியினரும் அடங்கிய ஊர்வலம் நடைபெற்றது.

மாலை 7 மணிக்கு, பழைய சந்தைப்பேட்டை மைதானத்தில், திரு. கே. ஏ. சின்னு தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. சி. சுந்தரம், எம். சுப்பராயன், பி. முனியப்பன், ஆர் குழந்தைவேல் ஆகியோர் 'கோவா சுதந்திரப் போராட்டமும் - நமது கடமையும்' என்பது பற்றி பேசினர். பின்னர், கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெருந்துறை

22—8—55 அன்று திரு பி கே வெங்கடேசன் தலைமையில் சர்வ கட்சியினரும் அடங்கிய கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகரிலுள்ள கடைகள் யாவும் மூடப்பட்டு காலை 9 மணிக்கு ஊர்வலமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில், போர்ச்சுகீசியரின் செயலைக் கண்டித்தும், கோவா விடுதலை கோரியும், கோவாவில் உயிரிழந்தோருக்கு வீரவணக்கம் செலுத்தியும் பல தோழர்கள் பேசினர்.

நாமக்கல்

22—8—55ல் நகரில் உள்ள எல்லா கடைகளும், உணவு விடுதிகளும் பள்ளிகளும் மூடப்பட்டு, பள்ளி மாணவர்கள் உட்பட அனைவரும் வேலை நிறுத்தம் செய்தனர். அன்று மாலை திரு. பி. உஸ்மான் சாயபு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் வி. எம் கந்தசாமி (தி. மு. க) போர்ச்சுகீசியரின் வெறிச் செயலைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினர் மற்றும் பல கட்சிகளையும் சேர்ந்த தோழர்களும் சொற்பொழிவாற்றிய பின் கண்டன அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

செங்கோட்டை

24—8—55-ல் சர்வகட்சியினரின் சார்பில் கோவா அடக்குமுறையைக் கண்டிக்கும் வகையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. மாலை 4 மணி அளவில் நடைபெற்ற ஊர்வலத்தில் ஏராளமான பொதுமக்கள் கறுப்புக் கொடிகளுடன் கலந்துகொண்டனர். இரவு 7 மணியளவில், திரு முகம்மது நயினர் தலைமையில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில், தி. மு கழகச் சார்பில் தோழர் ந நல்லையா சொற்பொழிவாற்றினர்.

சிவகாசி

24—8—55 அன்று நகர் முழுமையிலும் பூரண கடையடைப்பு செய்யப்பட்டது. அன்று மாலை 5 மணிக்கு திரு ஏ. சண்முகம் அவர்கள் தலைமையில் எல்லாக் கட்சியினரும் அடங்கிய கண்டன ஊர்வலமும், இரவு 7மணி அளவில் சிவன்கோயில் முன்பு பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் பல கட்சித் தோழர்களும் பேசினர். திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் எம். எஸ் இராமசாமி சொற்பொழிவாற்றினர்.

நாகூர்

26—8—55 அன்று நகரில் உள்ள எல்லாக் கடைகளும், பள்ளிகளும் மூடப்பட்டன காலை 9 மணியளவில், மாணவர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் உட்பட பொதுமக்கள் அனைவரும் ஒன்று திரண்டு கண்டன ஒலி முழக்கங்களை முழக்கிக்கொண்டு ஊர்வலம் வந்தனர்.

குன்னத்தூர்

24—8—55-ல், எல்லாக் கடைகளும், பள்ளிகளும் மூடப்பட்டன காலை 9 மணிக்கு கண்டன ஊர்வலம் நடைபெற்றது. அன்று மாலை, திரு. வி. எம். இராமசாமி தலைமையில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில், வி. சி வெங்கிடாசலம், கே எம். சுவாமியப்பன், கே கே. இராமசாமி, கே. ஏ. சந்திரன், ராமு, க. அன்பரசு ஆகியோர் கோவா சர்க்காரின் செயலைக் கண்டித்தும், போராட்டத்தில் உயிர் நீத்தத் தோழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் பேசினர்.

செங்கம் (வ. ஆ.)

26—8—55-ல், நகரில் முழு வேலை நிறுத்தம் நடைபெற்றது

மாலை 4 மணிக்கு எல்லாக் கட்சியினரும் சேர்ந்த ஊர்வலம் நடைபெற்று, யூனியன் அலுவலகத்தின் எதிரில் தோழர் ஏ.வி. சுப்புராயன் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் இராசகோபால், வெங்கிடாசலம், து. கண்ணன், கோ. முத்துசாமி, ஏ. ராமசாமி ஆகியோர் பேசினர்; போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கும், படுகாயமடைந்த தொண்டர்களுக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், கோவா பிரச்சினையில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசியலாரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒரத்தநாடு

26—8—55ல், சர்வகட்சிகள் ஒருங்கே சேர்ந்து மாலை 3 மணி அளவில், ஊர்வலம் வந்தனர் பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சுப்பையா, கோவிந்தராசு, அப்பாவு, உத்திராபதி, சீனிவாசன், காதர், மதிவாணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் போர்ச்சுகீசியரின் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், உயிரிழந்த வீரர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், தமிழ் வீராங்கனை சுபத்திரா தேவியின் வீரத்தினை மிகவாகப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

லா. தா. நகர்

26—8—55ல், லா. தா. நகர் கிராமத்தில் வேலை நிறுத்தம் செய்து, காலை 7 மணிக்கு ஊர்வலம் நடத்தி, இரவு 7 மணிக்கு தோழர் ஆர். இராமசாமி தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கோவா கண்டன அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவெண்ணெய்நல்லூர்

27—8—55ல், ஊராண்மைக் கழகத்திலிருந்து பல கட்சிகளின் சார்பில் ஊர்வலம் நடைபெற்றது பின்னர், திரு சின்னசாமி தலைமையில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பொன்னுரங்கம், கோபாலசந்திரம், தி. வ அண்ணாதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் கோவா கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

மத்திய சர்க்காரின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் 1955 மார்ச் திங்கள் இறுதிவரை கிராமங்களில் மொத்தம் 1,220 சமுதாய ரேடியோ செட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. மாநில சர்க்கார்களிடமிருந்து இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி நடப்பு நிதி ஆண்டில் மொத்தம் 13,310 ரேடியோ செட்டுகள் அமைக்கப்படும்.

செய்திச் சுருள்

★

மதுரை அறிவு வளர்ச்சி படிப்பகம்

18—8—55 இரவு 8 மணி அளவில், மதுரை ஆட்டு மந்தை பொட்டல் சந்தில் மீன் மார்க்கெட் சமீபம் உள்ள அறிவு வளர்ச்சி படிப்பகத்தில் தோழர் எம். காசிம் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், தோழர்கள் பாண்டியன், காதர், கலைசேகன் மற்றும் பலர் 'புரட்சி' என்ற தலைப்பில் பேசினர்கள்.

* * *

21—8—55 இரவு 7 மணி அளவில் தோழர் கே. ஆர். அனிபா தலைமையில் நடைபெற்ற மன்றச் சொற்பயிற்சிக் கூட்டத்தில், தோழர்கள் எஸ். பி. எஸ். அமீது, பாண்டியன், சலால், மற்றும் பலர் 'நாடும் - ஏடும்' என்ற பொருள் பற்றி பேசினர்கள்.

* * *

உறுப்பினர் கூட்டம்

அன்று இரவு 10 மணிக்கு தோழர் ஏ. எஸ். கலைசேகன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், படிப்பக வரவு - செலவு சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், படிப்பகத்தின் முதலாவது ஆண்டு விழாவை 11—9—55-ல் நடத்துவது என்றும், தோழர் ஜி. பராங்குசம் அவர்களின் தந்தையார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், கோவா போர்ச்சுகீசிய சர்க்காரின் வெறிச் செயலை வன்மையாகக் கண்டித்தும் போராட்டத்தில் உயிர்நீத்த வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உறந்தை சங்கரன் படிப்பகம்

19—8—55 இரவு 8 மணியளவில் நடைபெற்ற படிப்பகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் த. வில்லவன், ச. மதிவாணன், த. துரைராசன் ஆகியோர் முறையே சொற்பயிற்சி மன்றச் செயலாளராகவும், துணைச் செயலாளராகவும், ஆலோசகராகவும் நியமனம் பெற்றனர். வாரத்திற்கு ஒருமுறை சொற்பயிற்சிக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தேவாமங்கலத்தில் வார சந்தை திறப்பு விழா

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் தாலூகா தேவாமங்கலம் ஊராட்சி மன்றத்தின், பொது கால்நடை வாராந்திர சந்தை திறப்பு விழா 25—8—55 காலை 8 மணி யளவில், திரு. பி. தவசிலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. வி டி. அதிசயமணி அவர்கள் சந்தையைத் திறந்துவைத்தார். திரு. எஸ் சுந்தரராசு ராவ், எஸ். பிச்சையன் ஆகியோர் சந்தையின் அவசியத்தைக் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

சென்னை மாணவர் மன்றம்

மாணவர் மன்ற உறுப்பினர் கூட்டம் 28—8—55 மாலை 5 மணிக்கு மன்ற நிலையத்தில், திரு எஸ். எஸ். அருணகிரி நாதர் தலைமையில் நடைபெற்றது திரு மயிலை சிவமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திரு. கோ வில்வபதி, எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், வ. பா. தாமரைக் கண்ணி அம்மையார், உலகநாதன், வல்லை. பாலசுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் நிறைவேறின. மன்ற வெள்ளி விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது. வெளியூர் உறுப்பினர்கள் கடிதம் மூலம் அறிவித்திருந்த அரிய பல கருத்துக்களை ஆராய்ந்து முடிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சேலம் மாவட்ட உற்பத்தியாளர் சங்கம்

21—8—55-ல், சேலம் மாவட்ட பாவாடை நாடா, விளக்குத் திரி, பின்னல் கயிறு உற்பத்தியாளர் சங்கத்தின் 8-வது ஆண்டு விழா கொமாரபாளையம் சேஷனல் எலிமெண்டரி பாடசாலையில், திரு. ஜே. கே. கே. அங்கப்பன் தலைமையில் நடைபெற்றது. திரு. ஏ வி. இராமசாமி ஆண்டறிக்கை வாசித்தார். பகல் 2 மணிக்கு, திரு. கே. எஸ். சுப்பிரமணி தலைமையில் சங்க மகாசபைக் கூட்டம் நடைபெற்றபோது, சென்ற ஆண்டு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டும், புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டதுடன், தற்சமயம், பாவாடை நாடா, விளக்குத் திரி, பின்னல் கயிறு தொழில் மிக மந்தமாக இருப்பதால் அரசாங்கத்தின் உதவியுடன் கூட்டுறவு முறையில் நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

'அண்ணா சொற்பயிற்சி மன்றம்' துவக்கம்

26—8—55 மாலை 6 மணிக்கு, நாகர்கோவில், வடசேரி தி. மு. கழக அலுவலகத்தில், நாஞ்சில் மாவட்ட தி. மு கழகச் சார்பில், 'அண்ணா சொற்பயிற்சி மன்ற' அமைப்புக் கூட்டம், தோழர் வை. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தை நிர்வகிக்க தோழர் வை. சுப்பிரமணியனை செயலாளராகக்கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர் கூட்ட இறுதியில் கோவா துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சொற்பயிற்சிக் கூட்டம்

2—9—55 மாலை 6 மணிக்கு, மேற்படி மன்ற இல்லத்தில், தோழர் சு. வன்னியப்பெருமான் தலைமையில் 'மேடைப் பேச்சு' எனும் தலைப்பில் தோழர் வை. சுப்பிரமணியன் சொற்பொழிவாற்றுவார்.

திருவண்ணாமலை தி. மா. முன்னேற்றக் கழகம்

28—8—55 மாலை 5 மணிக்கு, அறுபத்துமூவர் மடத்தில், தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் கலைச்செல்வன் அவர்களைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்கழகத்தை மத்திய திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தோடு சட்டரீதியாக இணைப்பதென்றும், மாணவர்கள் இக்கழகத்திலுள்ள சட்ட திட்டங்களை எம்முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், கொள்கையை எந்த முறையில் வளரச் செய்யவேண்டும் என்றும், மற்றும் சில அறிவுரைகளையும் மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கி, தோழர் ப. உ. சண்முகம் சொற்பொழிவாற்றினர். தோழர் து சுப்பிரமணியன் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்பதுபற்றி விளக்கினர்.

பாராட்டுக் கூட்டம்

இலங்கை தி. மு. கழக கொழும்புக் கிளையின் முன்னாள் செயலாளர் தோழர் பி. தம்பித்துரை தாயகம் செல்வதை முன்னிட்டு, தோழர் ஏ எஸ். மணவைத்தம்பி தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் அவரது சேவையைப் பாராட்டி பல் கிளைகளின் சார்பிலும், மன்றங்களின்சார்பிலும் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்து தோழர் பி. தம்பித்துரை பேசினர்.

ஆம்பூர் திருவள்ளுவர் கழகத்திற்கு ஐ. நா. தபால்

ஆம்பூர், ஆக. 29—

திருக்குறளை ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்த்து வெளியிடும் ஐக்கிய நாடுகள் சபைக்கு வாழ்த்துக் கூறி 25—7—55ல், ஐ நா.பொதுச்சபை செயலாளர் அவர்களுக்கு ஆம்பூர் திருவள்ளுவர் கழகச் செயலாளர் எஸ். அன்னையன் எழுதிய கடிதத்திற்கு, ஐ நா. கலாச்சாரப் பிரிவு டைரக்டர் திரு ஜேன் தாமஸ் எழுதிய பதில் கடிதத்தில், "பிற நாட்டு இலக்கியங்களை மொழி பெயர்த்து வெளியிடும் ஐ. நா. திட்டத்திற்கு, ஐ. நா.-விலிருக்கும் இந்தியப் பிரதிநிதிகளால் கொடுக்கப்பட்ட இலக்கியங்களில் திருக்குறளும் ஒன்றாகும்; திருக்குறளை ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்க்க முயற்சிகள் துரிதமாக செய்யப்பட்டு வருகிறது; ஆம்பூர் திருவள்ளுவர் கழகம் எங்கள் பணியில் ஆர்வம் செலுத்துவதைக்காண மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்; தங்கள் கழக உறுப்பினர்களுக்கு எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்," என்று குறிப்பிட்டிருந்தார்.

குடியேற்றம் பகுத்தறிவு இளைஞர் மன்றம்

27—8—55 இரவு 9 மணியளவில், இராசன் பண்ணையில் தோழர் பி. ஜி இராசன் தலைமையில் நடைபெற்ற மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் கோவா அட்டூழியத்தைக் கண்டித்தும், உயிரிழந்தோருக்கு அனுதாபம் தெரிவித்தும், அறப்போரில் உயிர்நீத்த வீரர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி அளிக்குமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானிக்கப்பட்டதுடன், விரைவில் மன்றத்திற்கான புதிய செயற் குழுவை அமைக்க ஆவன செய்யுமாறு செயலாளரைக் கேட்டுக்கொண்டும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை தமிழாசிரியர் கழகம்

27-8-55 மாலை 4-30 மணிக்கு, சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில், திரு. மயிலை சிவமுத்து தலைமையில் மேற்படி கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் இவ்வாண்டு வேலைத் திட்டங்களையும் இனி செய்யவேண்டிய செயல்களைக் குறித்தும் தலைவர் விரிவாகப் பேசினார். பின்னர் திரு. அம்பை ஆர் சங்கரன், சண்முகம் ஆகியோர் பாராட்டுரைக்குப் பின், கழகப் பொருளாளர் வி. எஸ். சண்முகம் இவ்வாண்டு கணக்கு வழக்குகளைத் தெரிவித்தார். திரு. வா. வே. குப்புசாமி, எஸ். எஸ். அருணகிரிநாதர், கோ. வில்வபதி, வரதராமானுஜாச்சாரியார், ஆகியோர் பேசிய பின்னர், மாநில தமிழாசிரியர் கழகச் சட்ட திட்டங்கள் கழகத்தினரால் அங்கீகரிக்கப்பட்டன.

சென்ற ஆண்டின் செயற்குழுவினர்களுள் ஒரு சிலர் நீங்கலாக மற்றவர் யாவரும் இவ்வாண்டும் செயற்குழுவிலிருந்து பணியாற்ற வேண்டுமென்று கூட்டத்தினர் கேட்டுக்கொண்டனர்.

இந்திய யூனியனில் 1955 ஜூன் திங்களில் கடற் சுங்க, தரைச் சுங்க வருமானங்கள் மூலம் மொத்தம் ரூ. 1362 லட்சம் வருவாயாகியது; முந்திய ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில், இவ்வகையில் வசூலானது மொத்தம் ரூ. 1,274 லட்சம்தான்.

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் பலனாக, 1953-54-ம் ஆண்டில், அதற்கு முந்திய ஆண்டில் உற்பத்தியானதைவிட மொத்தம் 7,21,569 டன் உணவுத் தானியம் அதிகப்படியாக உற்பத்தி ஆயிற்று.

என். வி. நடராசன் கருத்துரை

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"சென்னை மாநிலம் மட்டும்தான் இந்நிலையில் என்றிருக்கவில்லை; சென்னையை அடுத்திருக்கும் தென்னாட்டின் மற்றொரு மாநிலம்—ஆந்திர மாநிலம்; அந்த மாநிலத்திலும் காங்கிரஸ் ஆளவந்தார்கள்தான் நகல் திட்டம் தயாரித்தனர், ரூ. 225 கோடிக்கு! திட்டத்தைத் தயாரித்த ஆந்திர சர்க்காரும்தான் டில்லி சென்றது—தங்கள் திட்டத்தை எடுத்துக்கொண்டு மத்திய குழுவுடன் விவாதிக்க; ஆனால் நடந்தது என்ன? சென்னை மாநிலத்தைப் போலவேதான் ஆந்திர திட்ட மதிப்பீடும் குறைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கேட்டதோ ரூ. 225 கோடி; டில்லி ஆட்சிபீடம் கொடுப்பதோ ரூ. 125 கோடி!

"தென்னாட்டிலுள்ள இயற்கை வளம் சுரண்டப்படுகிறது—வடநாட்டவர் சுரண்டிச் செல்கிறார்கள்; தென்னாட்டில் கிடைக்கும் இரும்பு வடநாட்டிலுள்ள பெரிய இரும்புத் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது; இங்குள்ள இயற்கை வளமுள்ள மண்ணைத் தோண்டி எடுத்துச் சென்று வடநாட்டைக் குபேரபுரியாக்குகிறார்கள்; நாம் நலிவுறுகிறோம்—அவர்கள் வாழ்வுறுகிறார்கள்; இந்த அநீதியை நாம் எப்படி பொறுத்துக் கொண்டிருப்பது?

"'அகில உலகமே புகழும் நேரு பண்டிதரையா குறை கூறுவது?'—என்று கேட்கலாம்; நாம் நேருவைக் குறைகூறுகிறோமென்றால், அர்த்தமில்லாமல் குறைகூறவில்லை; இந்த நாட்டிற்கு நேரு சர்க்கார் இழைத்துவரும் அநீதியை—ஓரவஞ்சனையை—கொடுமையை திட்டவட்டமான புள்ளி விபரங்களோடுதான் நாம் எடுத்துக் கூறுகிறோம்; 'நேரு சர்க்கார் காங்கிரஸ் சர்க்கார் ஆயிற்றே' என்ற கட்சி பேதத்தின் காரணமாக அல்ல, நாம் சொல்வது. 'சர்க்காரைப் பற்றிக் குறை கூறுவது தவறானது; அது சர்க்காருக்கு எதிராகக் கூறப்படும் பொய்' என்று சர்க்கார் கூறினால்கூட அதுபற்றி நாம் கவலைப்படத் தேவை இல்லை; ஆனால், தங்கள் வாழ்நாளையே அர்ப்பணித்து, உயிரையும் வாழ்வையும் துச்சமென மதித்து, இரத்தத்தைச் சிந்தி—கொள்கைக்காக அல்லும் பகலும் அயராது பாடுபடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி சர்க்கார் தவறாக எண்ண ஒருபோதும் நாம் ஒப்புக்கொள்ளமாட்டோம்; எனவே, நாம் கூறுவது பொய்யல்ல; தக்க ஆதாரங்களை அருகில் வைத்தே நாம்—வடநாட்டவரின் ஆணவப் போக்கை அம்பலப்படுத்துகிறோம் என்பதை அனைவரும் உணரவேண்டும்;

"வடநாட்டு சர்க்கார்—நேரு சர்க்கார்—டெல்லி ஏகாதிபத்தியம் நம்மை இந்த அளவில் மட்டும் இழிநிலை அடையச் செய்யவில்லை; எத்தனை எத்தனையோ காரியங்களை நாம் எடுத்துக் காட்ட முடியும்.

"இலங்கையிலிருந்து எண்ணற்ற தமிழர்கள்—திராவிட இன மக்கள்—'நாடற்றவர்கள்,' என்று கூறப்பட்டு இலங்கை சர்க்காரால் தினந்தினம் வெளியேற்றப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்; நாள்தோறும் இலங்கையை விட்டு வெளியேற்றப்பட்டுவரும் நமது திராவிடத் தோழர்களின்—இலங்கை சர்க்காரின் கருத்துப்படி—'நாடற்றவர்'களின் நிலை குறித்து சென்னை மாநில சர்க்கார் ஒரு சிறிதளவேனும் கவலை எடுத்துக் கொண்டிருக்கிறதா? அவர்களின் வாழ்க்கைக்கான வசதிகளுக்கு வழிகோலுவதற்கு ஒரு பொழுதாவது எண்ணியதுண்டா? இல்லை;

"இலங்கை இந்தியர்களின் நிலைபற்றி நேரு பண்டிதரோ, 'பேச்சுவார்த்தைகளை நீடிக்கலாம்' என்று கூறுகிறார்; ஆணவக்காரர்களால் அலைக்கழிக்கப்பெற்று, வாழ்வு எங்கே என்று தேடிவரும் ஆயிரக்கணக்கான மக்களின் நிலை பண்டிதரின் கண்களில் படவில்லை. ஆனால், அண்மையில், 'கிழக்கு வங்க மாநிலத்திலிருந்து ஏராளமான அகதிகள் வெளியேறுகிறார்கள்; சென்னை போன்ற மாநில சர்க்கார்கள் உடனடியாக அவர்களுக்குப் பரிகாரம் தேட முன்வர வேண்டும்' என்று நேரு சர்க்காரால் உத்திரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது—மாநில சர்க்கார்களுக்கு!

"தென்னாட்டைப் பற்றி நேரு பண்டிதர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்? நம் தாய் நாட்டைச் சேர்ந்த ஆயிரமாயிரம் தோழர்கள் தவிக்கிறார்கள்; அவர்களைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ள அவருக்கு நேரமில்லை; ஆனால், வேறு எங்கிருந்தோ வெளியேறிவரும் அகதிகளுக்கு உடனடியாக வாழ்க்கை வசதிகள் செய்து தரும்படி உத்தரவிடுகிறார்; இந்நாட்டைச் சொந்த நாடாகக் கொண்ட தமிழனுக்கு, மற்றவர்களுக்குச் செய்வதில் 8-ல் ஒரு பாகம்—அதுகூட வேண்டாம்—10-ல் ஒரு பாகமாவது வாழ்க்கை வசதிக்குத் தேவையானவற்றைச் செய்யக்கூடாதா? அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு நெஞ்சிரக்கமில்லையா என்றுதான் நாம் கேட்கிறோம்.

"நாம் இதுபற்றி குறிப்பிட்டுக் கேட்பதற்குக் காரணம், நாமும் வரி கொடுக்கிறோம்; வரி கொடுக்கும் ஒரு குடிமகன் என்ற முறையில் நமக்குக் கேட்கவும் உரிமை இருக்கிறது; அதிலும், தென்னாட்டின் முக்கிய எதிர்க்கட்சி என்ற முறையில் நாம் கண்டிப்பாகக் கேட்டே ஆகவேண்டியவர்களாக இருக்கிறோம். இது திராவிட முன்னேற்றக் கழகத்தவருக்கு மட்டும் செய்யும் வேலை அல்ல; தமிழ் இன மக்கள் அனைவரையும் பொறுத்த பொதுவான பிரச்சினை என்பதே! சர்க்கார் தட்டிக்கழித்து வரும் தமிழரின் இந்தப் பொதுப் பிரச்சினை குறித்து திராவிட முன்னேற்றக் கழகம், அடுத்து நடைபெற இருக்கிற மாநில மாநாட்டில் முடிவு செய்யத்தான் இருக்கிறது; எனவே, நம்முடைய வேண்டுகோளை டில்லி சர்க்கார் நன்கு உணர்ந்து அதன்படி செயலாற்ற வேண்டும்,"

—இவ்வாறு, தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள், 31—3—55 மாலை 6½ மணி அளவில், சென்னை 8-வது வட்டம் பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகத்தின் முதலாண்டு விழாவில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் தொடர்ந்து பேசினார்:—

"திராவிட முன்னேற்றக் கழகம்—பொதுவாக திராவிடர் இயக்கம், இடைவிடாமல் தளராமல் நாட்டு மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வருகிறது; இந்த உண்மையினை, தமிழகத்தின் வரலாறு எடுத்துக் காட்டும். தென்னாட்டிலே கட்டாய இந்தி புகுத்தப்படுவதை எதிர்த்துத் தன்னாலியன்ற அளவில் எதிர்ப்புப் பணியில் ஈடுபட்டிருப்பது திராவிடர் இயக்கமே ஆகும்; தென்னாட்டைத் தன் கையில் அடக்கி வைத்து—அடிமைப் படுத்தி சுரண்டிச் செல்லும் வடநாட்டு ஆணவப் போக்கைத் துணிந்து எதிர்க்கும் இயக்கம் ஒன்று உண்டென்றால், அது, திராவிடர் இயக்கமே ஆகும்;

"மனிதர்கள் அனைவரும் சுய உரிமையுடன் கூடிய தனிச் சுதந்திர நாட்டில் வாழவேண்டுமென்றே தி. மு. கழகம் பாடுபட்டு வருகிறது.

"இந்தியப் பேரரசின் குடியரசுத் தலைவராக இருக்கும் இராசேந்திரர் முதல்—அகில உலகிலும் புகழ் ஒளி பெற்றுத் திகழும் 'ஆசிய ஜோதி' நேரு பண்டிதர், வடநாட்டு மந்திரிகள் வரை, அனைவரும் கூறுகிறார்கள்—'கிராமபோன் ரிகார்டு' போன்று—'தென்னாட்டில் இந்தி மொழியைத் திணிக்கமாட்டோம்,' என்று! ஆனால், நடைமுறையில் நாம் காண்பதென்ன? சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பட்ட நடவடிக்கைகளைத் தானே நாம் காண்கிறோம்? இந்த அநீதியை நாம் எப்படிக் கண்டிக்காமல் இருக்க முடியும்?

"முன்பும், இந்தி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டபோது நாம் எதிர்த்தோம்—நம் தாய் மொழியின் சிறப்பைக் காப்பதற்காக! உயிர்களைப் பலி கொடுத்தோம்! தாளமுத்து—நடராசன்களை இழந்து தமிழ் மொழியைக் காப்பாற்றினோம்; நம்மைத் தவிர—திராவிட இயக்கத்தவரைத் தவிர, 'தமிழைக் காத்தோம்' என்று சொல்ல வேறு எவருக்கு யோக்கியதை இருக்கிறது?

'இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிப்பதில்லை என்று கூறுகிற நேரு சர்க்கார், தபால் தலைகளிலே இந்தியைப் புகுத்துவதேன்? 'இந்தி மொழியைத் திணிப்பதில்லை' என்று நேரு பண்டிதர், உண்மையான மனவளம் பெற்று கூறுபவராக இருந்தால்—அவர் கூறுவதில் அர்த்தம் இருந்தால், ஏன் தபால் தலைகளில் தமிழ், மலையாளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய மொழிகளை அச்சிடக்கூடாது?

"மலையாளப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய தபால் தலைகளில் மலையாளமும், கன்னடப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய தபால் தலைகளில் கன்னட மொழியையும் ஏன் அச்சிடக்கூடாது? 'வலுக்கட்டாயமாகத் திணிக்கும் நோக்கம் இல்லை' என்று கூறும் பண்டிதர், ஏன் இந்தி மொழியில் மட்டும் அச்சிட வேண்டும்?

"அவர் அவ்வாறு செய்திருந்திருப்பாரேயானால் அவர் சொன்னதிலே 'நாணயம்,' 'நேர்மை' என்பது இருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொண்டிருப்போம்; ஆனால், செயல் ஒன்று—சொல் ஒன்று என்று வேறுபட்டுக் கூறும் நேரு பண்டிதரின் போக்கு நேர்மைதானா—நியாய உள்ளம் கொண்டதுதானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்; 'பேதாபேதம் காட்டக் கூடாது' என்று கூறிடும் தோழர்கள் இதனை நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; சிந்தித்துப் பார்ப்பதுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடக் கூடாது, இமயம் கொண்டலையும் வடநாட்டு ஆதிபத்தியக்காரர்களின் துடுக்கினை அட்டூழியத்தை—அதிகாரப் போக்கை அழித்தொழிக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"நாம் சிந்தித்துப் பார்த்துவிட்டோம்; ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின்—டில்லி சர்க்காரின் திமிரான போக்கை அழிக்க ஆராயவும் போகிறோம்; தமிழ்நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அத்தனை பிரதிநிதிகளும்—தி. மு. கழகத் தோழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அத்தனை பேரும் மாநில மாநாட்டில் ஒன்று கூடி, இந்தி ஒழிப்பிற்கான தக்க நடவடிக்கைகள் குறித்து யோசனை கூற இருக்கிறோம்; தமிழ் இன மக்களின்—தமிழ் மொழியின் பாதுகாப்பிற்காகத் தி. மு. கழகம் நடத்த இருக்கும் நடவடிக்கைகளில், சென்ற 1937, 1948-ம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி ஒழிப்புப் போராட்டங்களின் போதெல்லாம் ஒதுங்கிநின்று கொண்ட அருமை காங்கிரஸ் நண்பர்கள் கலந்து கொள்வார்களா என்று கேட்கிறோம்,"

(பேச்சு முடியவில்லை)

கழகக் கூட்டங்கள்

★

கோபிசெட்டிப்பாளையம்

2—9—55 மாலை 7 மணிக்கு பெரியார் திடலில்

பேசுவோர்:

எஸ். எஸ். தென்னரசு
வி. சண்முகநாதன்
பி. ஏ. சுவாமிநாதன்

★

கூத்தூர்

தி. மு. கழகத் துவக்க விழா

1—9—55 மாலை 6 மணிக்கு, கூத்தூர் பெருமாள் கோயில் முன்னர், தோழர் க நடராசன் தலைமையில் மேற்படி விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் கு. தங்கவேலு கொடியேற்றிவைப்பார். தோழர்கள் கோ. சிவப்பெருமாள், து. பெரியசாமி, மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்

சென்னை—சைதை தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு

1—9—55 மாலை 6½ மணிக்கு கழக இல்லத்தில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பொதுக்கூட்ட வரவு-செலவு, பொதுச் செயலாளரின் அறிக்கை ஆகியவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

சொற்பயிற்சிக் கூட்டம்

4—9—55 பிற்பகல் 3-30 மணியளவில், சென்னை அழகிரி நினைவு மன்றத்தில் 'ஏன் இந்தியை எதிர்க்கிறோம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணம்

1—9—55 காலை 7½ மணி அளவில், சென்னை வண்ணாரப்பேட்டை, கொல்லாவார் அக்ரகாரம் தெரு எண் 81 இல்லத்தில் வண்ணை 'சற்குண கபே' உரிமையாளர் திரு. எஸ் பி. பொன்னுசாமி அவர்களது மகள் தோழியர் இராஜேசுவரி—தோழர் சி துரைசாமி திருமணம், தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி இராமசாமி, எம். எஸ். முத்துகிருஷ்ணன், அரு. சங்கரலிங்கம் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசுவர்.

50,000 டன் உருக்கு

ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்குமாம்!

ரூ 2½ கோடி பெறுமானமுள்ள 50,000 டன் உருக்கை, ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்குமாம்; சென்ற ஜூலை மாதத்தில் 20,000 டன் உருக்கை ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்கியுள்ளது.

'விடுதலை சக்தி'கள் கோவாவை விடுவிக்கும்'

"கோவாவில் தற்போது பற்பல சக்திகள் வேலை செய்கின்றன; அவற்றில் பெரும்பாலானவை, பொருளாதார சக்திகள்; அவை மட்டுமின்றி, சரித்திர சக்திகளும்கூட இயங்கத் தொடங்கி விட்டன; பொருளாதாரச் சக்திகளும், சரித்திர சக்திகளும் ஒன்று சேர்ந்து, கோவா மீதுள்ள போர்ச்சுகீசியரின் காலனி ஆதிக்கத்தை விரைவில் ஒழித்துவிடும்.

"கோவாவை, படை பலத்தின் மூலம் விடுதலை செய்ய இந்தியாவால் முடியும்; ஆனால், அம்முறை, இந்தியாவின் சமாதானக் கொள்கைக்கு முரண்பட்டதாகும்,"

என்று, பிரதமர் நேரு, தேஜ்பூரில், பத்திரிகை நிருபரிடையிலும், பொதுக் கூட்டத்திலும் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

37 கிராமங்களுக்கு மின்சார வசதி

சென்னை, ஆக. 29—

1955 ஜூலை திங்களில் கீழ்க்கண்ட 37 கிராமங்களுக்கு மின்சார வசதி பரவலாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டம்: பெருமாளகரம், கோவிந்தவாடி.

கோவை மாவட்டம்: செம்மண்டபாளையம், கீத்தனூர், சாவடிப்பாளையம், மேட்டுப்பாளையம், தொட்டிப்பாளையம், வல்லமநாய்க்கன்பாளையம், கீர்த்தனூ-மந்திரிப்பாளையம், சின்னக்கனூர், கானூர்ப்புதூர், தொட்டப்பாளையம், கோனம்பாளையம், தாம்பசக்கவுண்டன்பாளையம், பரவபாளையம், வரதம்பாளையம், கொட்டுவீரம்பாளையம், சின்னக்குயிலை.

மலபார் மாவட்டம்: சுண்டேலி.

மதுரை மாவட்டம்: சமயகவுண்டன்பட்டி, தருமாத்தம்பட்டி, தாசப்பட்டி, பழனியூர், பொண்டம்பட்டி, கீழ வடகரை.

நீலகிரி மாவட்டம்: எல்லஹெல்லி, தும்மனும்பட்டி.

வடஆற்காடு மாவட்டம்: பண்டு நள்ளி,

இராமநாதபுரம் மாவட்டம்: பெரியபேரளி, ஆனைக்குட்டம்.

திருநெல்வேலி மாவட்டம்: எலும்பையூரணி, ஊத்துப்பட்டி, திவரிநாகூர்.

சேலம் மாவட்டம்: பனங்காடு.

தென் கன்னடம் மாவட்டம்:—நாயிபள்ளி.

தென்ஆற்காடு: தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி.

1953-54-ம் ஆண்டில் உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 20,29,17,000 செலவழிக்கப்பட்டது.

நெய்வேலி திட்டம்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று, நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பழுப்பு நிலக்கரிக்கு, நிலக்கரியின் பாதி அளவு 'கலோரி' மதிப்பு உண்டு என்றும் கூறப்படுகிறது.

சுரங்கத்தில் ஊறும் தண்ணீரை இறைப்பதற்காக எட்டு பம்பு செட்டுகள் இந்தியாவிற்கு வந்துவிட்டதாகவும், சோதனை வேலைகள் வரும் நவம்பர் திங்களில் தீவிரமாகத் துவங்கும் என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.